**மார்ச் – 16**

# TNPSC துளிகள்

- போரூரில் உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலையின் மிக அருகில் உள்ள OSR நிலத்தில் சென்னையின் முதல் சதுப்பு நில மழைநீர் உறிஞ்சும் பூங்காவினை தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஆனது, டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் 150வது ஆண்டு நிறைவை ஒட்டி, 2027 ஆம் ஆண்டில் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் (MCG) பகல் இரவாக நடைபெற உள்ள ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க போட்டியுடன் கொண்டாட உள்ளது.
- மத்திய அமெரிக்காவில் உள்ள கௌத்திமாலாவில் அமைந்துள்ள மிக அதிகளவில் செயல்பாட்டில் உள்ள எரிமலையான வோல்கன் டி ஃபியூகோ ஆனது, 2018 ஆம் ஆண்டிற்குப் பிறகு சமீபத்தில் மீண்டும் வெடித்துள்ளது.
- பெண்கள் நிலை குறித்த ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் (UNCSW) 69வது அமர்வில் இந்தியாவானது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தலைமையில் பங்கேற்றது.
- தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுக்கச் செய்வதில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தவதற்காக ஜெர்மனியில் 4வது தீவிரவாத நிதியளிப்புத் தடுப்பு (NMFT) மாநாடு ஆனது நடைபெற்றது.
- டெல்லி சர்வதேச விமான நிலையமானது, தொடர்ந்து ஏழாவது ஆண்டாக ஆசிய-பசிபிக் பகுதியில் ஆண்டிற்கு 40 மில்லியன் பயணிகளுக்கு மேலான பயண பதிவு கொண்ட சிறந்த விமான நிலையம் பிரிவில் மதிப்பு மிக்க ASQ விருதை வென்று உள்ளது.
- நீர் பயன்பாட்டு திறன் வாரியம் (BWUE) என்பது, எரிசக்தி மற்றும் வளங்கள் என்ற நிறுவனத்துடன் (TERI) இணைந்து, புது டெல்லியில் "நீர் நிலைத்தன்மை மாநாடு 2025" என்ற தலைப்பிலான ஒரு நாள் மாநாட்டை ஏற்பாடு செய்தது.
- விபத்துகளைத் தடுப்பதை ஊக்குவிப்பதற்கும் ஊழியர் நல்வாழ்வை நன்கு உறுதி செய்வதற்கும் தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களின் பணியிடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மார்ச் 04 முதல் மார்ச் 10 ஆம் தேதி வரை 54வது தேசியப் பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப் பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு கனிமங்களைக் கொண்டுள்ள நிலங்களுக்கு வரிச் சட்டம், 2024


- மாநிலச் சட்டமன்றமானது, 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு கனிமங்களைக் கொண்டுள்ள நிலங்களுக்கு வரி விதிக்கும் சட்டத்தினை நிறைவேற்றியது என்பதோடு இது 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதியன்று அரசிதழில் வெளியிடப்பட்டது.
- இந்தச் சட்டம் ஆனது சுண்ணாம்புக்கல் உள்ளிட்ட பல்வேறு கனிமங்களை அகழ்ந்து எடுப்பதற்கு மெட்ரிக் டன்னுக்கு 160 ரூபாய் என்ற விகிதத்தில் வரி விதிக்கிறது.
- இந்தச் சட்டத்தின் நோக்க எல்லைகளைப் பூர்த்தி செய்வதற்கான பல்வேறு விதிகளை அரசாங்கம் இன்னும் உருவாக்கவில்லை.

- அவ்விதிகள் ஆனது வரி விதிப்பு, மதிப்பீடு மற்றும் வரி வசூல் முறை, வரி செலுத்தும் முறை போன்றவற்றை வழங்கும் வகையில் இருக்கும்.




# தேசியச் செய்திகள்

## PMFBY திட்டத்தின் விரிவாக்கம்





- பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா திட்டம் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தினை 2025-26 ஆம் ஆண்டு வரையில் தொடர்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு 2025-26 ஆம் ஆண்டு வரையில், சில தடுக்க

முடியாத இயற்கைப் பேரழிவுகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க இது உதவும்.

- 824.77 கோடி ரூபாய் நிதியுடன் புதுமை மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிதியை (FIAT) உருவாக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- YES-TECH, WINDS போன்ற சில திட்டங்களின் கீழ், தொழில்நுட்ப முன்னெடுப்புகளுக்கு நிதி அளிப்பதற்காக இந்த நிதிப் பயன்படுத்தப்படும்.

## "75/25" முன்னெடுப்பு குறித்த புதிய தகவல்கள்

- 2025 ஆம் ஆண்டு மார்ச் 05 ஆம் தேதி நிலவரப்படி, மொத்தம் 42.01 மில்லியன் நபர்கள் உயர் இரத்த அழுத்தத்திற்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.
- சுமார் 25.27 மில்லியன் பேர் நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை பெற்றுள்ளதுடன், அதற்கான இலக்கில் 89.7 சதவீதம் எட்டப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு மே 17 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்ட உலக உயர் இரத்த அழுத்த தினத்தன்று அரசாங்கம் "75/25" முன்னெடுப்பினை தொடங்கியது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு ஆகிய நோயால் பாதிக்கப்பட்ட 75 மில்லியன் நபர்களுக்கு தரப்படுத்தப்பட்டச் சிகிச்சையை வழங்குவதே இதன் நோக்கமாகும்.




## எண்ணெய் வயல்கள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதா, 2024


- மக்களவையானது 2024 ஆம் ஆண்டு எண்ணெய் வயல்கள்/கிணறுகள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது 2018 ஆம் ஆண்டு எண்ணெய் வயல்கள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டத்தினை புதுப்பிக்க முயல்கிறது.
- நிலக்கரி, லிக்னைட் மற்றும் ஹீலியம் ஆகியவை, 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப் படுவதால் அவை இந்த மசோதாவில் இருந்து வெளிப்படையாக விலக்கப்படுகின்றன.
- இந்த மசோதாவானது, 'சுரங்கக் குத்தகைகள்' என்ற சொல்லினைத் தற்போது ஆய்வு, உற்பத்தி மற்றும் அகற்றல் நடவடிக்கைகளை நிர்வகிக்கச் செய்கின்ற 'பெட்ரோலியக் குத்தகைகள்' என்ற சொல்லாக மாற்றுகிறது.
- இந்தப் புதிய மசோதாவானது, அதிகபட்ச அபராதத்தினை 25 லட்சமாக அதிகரித்து, சிறைத் தண்டனைக்குப் பதிலாக நிதி அபராதங்களை விதிக்கிறது.

- இந்தியாவின் கச்சா எண்ணெய்த் தேவையானது, தற்போதைய சுமார் 5.5 மில்லியன் பீப்பாய்களில் இருந்து ஒரு நாளைக்குச் சுமார் 6.5-7 மில்லியன் பீப்பாய்களாக (bpd) உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




# சர்வதேசச் செய்திகள்

## பாகிஸ்தான் ஜாஃபர் விரைவு இரயில் கடத்தல்




- சுமார் 440 பயணிகளை ஏற்றிச் சென்ற ஜாஃபர் விரைவு இரயிலானது, பலூச் விடுதலை இராணுவ (BLA) அமைப்பினைச் சேர்ந்தவர்களால் கடத்தப்பட்டது.
- BLA என்பது பாகிஸ்தானில் பலூசிஸ்தானில் செயல்படும் வலிமையான ஒரு கிளர்ச்சிக் குழுவாகும்.

- இந்தக் குழுவானது, ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பலூசிஸ்தானுக்கு சுதந்திரம் கோரி வருகிறது.
- சீன பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில், சீனாவின் சுமார் 65 பில்லியன் டாலர் முதலீட்டில் பலூசிஸ்தான் ஒரு குறிப்பிடத்தக்க அங்கம் வகிக்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## துபாயின் அந்நிய நேரடி முதலீட்டின் முக்கிய மூலமாக விளங்கும் இந்தியா

- தொடர்ந்து நான்காவது ஆண்டாக புதிய வெளிநாட்டு நிறுவனங்களின் அந்நிய நேரடி முதலீட்டு (FDI) திட்டங்களுக்கான உலகின் மிக முன்னணி இடமாக துபாய் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- துபாயில் அந்நிய நேரடி முதலீட்டிற்கான (FDI) மிகவும் முக்கிய மூல நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், துபாயில் அந்நிய நேரடி முதலீட்டை மேற்கொள்ளும் நாடுகளில் அமெரிக்கா, பிரான்சு மற்றும் ஐக்கியப் பேரரசு நாடுகளை இந்தியாவானது முந்தி முதல் இடத்தில் உள்ளது.
- அந்நிய நேரடி முதலீட்டில் இந்தியாவின் பங்களிப்பு ஆனது 21.5% ஆக உள்ளது, அதைத் தொடர்ந்து அமெரிக்கா (13.7%), பிரான்சு (11%), ஐக்கியப் பேரரசு (10%) மற்றும் சுவிட்சர் லாந்து (6.9%) ஆகிய நாடுகளும் உள்ளன.




## 2024-25 ஆம் ஆண்டில் எண்ணிம வழி கட்டணப் பரிவர்த்தனைகள்

- 2024-25 ஆம் நிதியாண்டில் (2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை) சுமார் 18,120.82 கோடிக்கும் அதிகமான பரிவர்த்தனைகள் பதிவாகியுள்ளன.
- இது 2020-21 ஆம் நிதியாண்டில் 4,370.68 கோடி பரிவர்த்தனைகளிலிருந்து 2024-25 ஆம் நிதியாண்டில் சுமார் 18,120.82 கோடியாக உயர்ந்துள்ள நிலையில் எண்ணிமப் பரிவர்த்தனைகள் ஆனது, 4 மடங்கு வளர்ச்சியைக் கண்டுள்ளன.
- 2023-24 ஆம் நிதியாண்டில் ஒட்டு மொத்த எண்ணிம வழியிலானப் பரிவர்த்தனைகளில்

ஒருங்கிணைந்தப் பயண வழங்கீட்டு இடைமுகம் மிகவும் அதிகபட்சப் பங்கை (70%) கொண்டுள்ளது.

| Financial Year | Total Digital Payments Transactions | |
|---|---|---|
| | Volume (in Crore) | Value (in Lakh Crore) |
| 2020-21 | 4,370.68 | 1,414.58 |
| 2021-22 | 7,197.68 | 1,744.01 |
| 2022-23 | 11,393.82 | 2,086.85 |
| 2023-24 | 16,443.02 | 2,428.24 |
| 2024-25* | 18,120.82 | 2,330.72 |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நீரின் நான்காவது வடிவம்



RESEARCHERS AT FRANCE'S INSTITUT LAUE-LANGEVIN HAVE IDENTIFIED PLASTIC ICE VII, A UNIQUE WATER FORM BEHAVING LIKE BOTH LIQUID AND SOLID UNDER EXTREME PRESSURE


- Plastic Ice VII எனப்படுகின்ற நான்காவது வடிவப் பனிக்கட்டியை அறிவியலாளர்கள் தற்போது உறுதிப்படுத்தியுள்ளனர்.
- இந்த அரிய ஒரு நிலையானது நீர் மூலக்கூறுகள் திடமான அமைப்பில் இருக்கும் போது தடையின்றி சுழல அனுமதிக்கிறது.
- வழக்கமான ஒரு பனிக்கட்டியைப் போலல்லாமல், Plastic Ice VII ஆனது ஒரு கடினமான அமைப்பைக் கொண்டிருந்தாலும், மூலக்கூறு சுழற்சியை அனுமதிக்கிறது.
- புவியின் வளிமண்டல அழுத்தத்தினை விட 3 ஜிகா பிக்சல்ஸ் அதாவது சுமார் 30,000 மடங்கு அதிக அழுத்தத்தின் கீழ் பனி உருவாகிறது.

- இதற்கு 450 கெல்வின் (177°C) என்ற அளவிற்குகும் மிக அதிகமான வெப்பநிலையானது தேவைப் படுகிறது.
- இந்தத் தீவிர ஒரு நிலையானது, வியாழன் மற்றும் சனிக் கோளின் பனி நிறைந்த சில நிலவுகளான கானிமேட் மற்றும் டைட்டன் ஆகியவற்றில் காணப்படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## தமிழ்நாட்டில் சிற்றாமைகளின் வலை அமைப்பு 2025

- தன்னார்வலர்கள் மற்றும் தமிழ்நாடு வனத்துறை ஆகியவை இணைந்து மாநிலம் முழுவதும் இதுவரையில் 2,53,719 ஆமை முட்டைகளைச் சேகரித்துள்ளனர் என்ற ஒரு நிலையில் இது கடந்த ஆண்டில் சேகரிக்கப்பட்ட சுமார் 2,58,907 என்ற மொத்த எண்ணிக்கையினை நெருங்குகிறது.
- இது கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாகும்.
- ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில், சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டக் கடற்கரைகளில் 1,200 க்கும் மேற்பட்ட ஆமைகள் உயிரிழந்து கரை ஒதுங்கின.
- மார்ச் 11 ஆம் தேதி நிலவரப்படி, 89,784 முட்டைகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் கடலூர் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து 47,082 முட்டைகளுடன் சென்னை ப்பிரிவு இடம் பெற்றுள்ளது.
- 73,728 முட்டைகளுடன் நாகப்பட்டினம் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- விழுப்புரம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய பிரிவுகளில் முறையே 23,403 மற்றும் 18,073 முட்டைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ACM A.M. டூரிங் விருது 2024

- ஆண்ட்ரூ G. பார்டோ (மாசசூசெட்ஸ் பல்கலைக்கழகம், ஆம்ஹெர்ஸ்ட்) மற்றும் ரிச்சர்ட்

S. சட்டன் (ஆல்பர்ட்டா பல்கலைக்கழகம்) ஆகியோர் 2024 ஆம் ஆண்டு ACM A.M. டூரிங் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

- கூடுதல் நுட்பக் கற்றலில் (RL) அவர்களின் முன்னோடி மிக்க அரும்பெரும்பணிக்காக அவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
- RL என்பது ஒரு சீரற்றச் சூழலில் நடவடிக்கைகளுக்கான வெகுமதிகளைப் பெறுவதன் மூலம் ஒரு முகவர் மிகவும் வெற்றிகரமாக நடந்து கொள்ளக் கற்றுக் கொள்ளும் ஒரு செயல்முறையாகும்.




## மீன்வளம் சார் புத்தொழில் மாநாடு 2.0





- மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மீன்வளத் துறையானது, ஐதராபாத்தில் மீன்வளம் சார்ந்தப் புத்தொழில் மாநாடு 2.0 நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தது.
- இந்த நிகழ்வு ஆனது, மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புத் துறைகளில் தொழில்முனைவு, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் நிலைத் தன்மையை மேம்படுத்துவதை ஒரு

முக்கிய நோக்கமாகக் கொண்டதாகும்.

- இந்த மாநாட்டின் போது, NFDP கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்ரிதி சஹ்-யோஜனா (PM-MKSSY) எனும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இந்தச் செயலியானது மிகவும் குறிப்பாக மீன்வளத் துறையில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு நன்குப் பயனளிக்கும் வகையில் அவர்கள் அரசாங்கத் திட்டங்களை அணுகுவதை எளிதாக்குவதற்காக என வடிவமைக்கப் பட்டு உள்ளது.

# முக்கிய தினங்கள்

## உலக சிறுநீரக தினம் - மார்ச் 13





- உலக நாடுகளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது வியாழக் கிழமை அன்று இந்த நாளைக் கொண்டாடுகிறது.
- சிறுநீரகம் தொடர்பான நோய்கள் மற்றும் பல்வேறு தொற்றுகள் மற்றும் சில தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Are Your Kidneys OK? Detect early, protect kidney health" என்பதாகும்.
- நாள்பட்ட சிறுநீரக நோய் (CKD) ஆனது, உலகளவில் சுமார் 850 மில்லியன் நபர்களை பாதித்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

# இதரச் செய்திகள்

## இந்தியத் தேசிய ஆவணக் காப்பகத்தின் 135வது ஸ்தாபன தினம்

- இந்தியத் தேசிய ஆவணக் காப்பகம் (NAI) ஆனது, மார்ச் 11 ஆம் தேதியன்று அதன் 135வது ஸ்தாபன தினத்தினை "Indian Heritage through Architecture" என்ற கருத்துருவிலான ஒரு கண்காட்சியுடன் கொண்டாடியது.
- கலாச்சார அமைச்சகத்தின் கீழ் இணைக்கப்பட்ட அலுவலகமான NAI ஆனது, முதலில் 1891 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் தேதியன்று கொல்கத்தாவில் (கல்கத்தா) பிரிட்டிஷ் ஆவணக் காப்பு (பதிவுத் துறையாக) துறையாக நிறுவப்பட்டது.
- ஆவணங்களை கொல்கத்தாவிலிருந்து புது டெல்லிக்கு மாற்றும் செயல்பாடு 1937 ஆம் ஆண்டில் முழுமையாக முடிவடைந்தது.

- இந்தியத் தேசிய ஆவணக் காப்பகம் ஆனது, பொதுப் பதிவுச் சட்டம், 1993 மற்றும் பொதுப் பதிவு விதிகள், 1997 ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான ஒரு தலைமை நிறுவனமாகவும் செயல்படுகிறது.
- இந்த நிகழ்வின் போது, இந்தியாவின் பரந்த கையெழுத்துப் பிரதி பாரம்பரியத்தினை ஆய்வு செய்தல், ஆவணப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றிற்காக 'ஞான பாரதம் திட்டம்' தொடங்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★